செ.கு.எண்:41 நாள்: 05.08.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.8.2021) கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சாமனப்பள்ளி கிராமத்தில் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தைத் தொடங்கி வைத்து, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி**

ஊடக நண்பர்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய காலை வணக்கத்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், பத்திரிகையாளர், ஊடகவியலாளர் சார்பில் கொரோனா நிதி வழங்கியதற்கும் அரசின் சார்பில் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவிற்கே ஒரு முன்னோடித் திட்டமாக விளங்கக்கூடிய வகையிலே "மக்களைத் தேடி மருத்துவம்" என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தைக் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைத்திருக்கிறோம். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் செயல்பாடுகள் மிகுந்த அர்ப்பணிப்போடு இருந்தது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கொரோனாவினுடைய இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தத் துறை எந்த அளவுக்குச் செயல்பட்டது, அதில் குறிப்பாக, மருத்துவர்களுடைய தன்னலமற்றப் பணியும், செவிலியர்களுடைய பணியும் ஒரு முக்கியமான காரணமாக அமைந்தது என்பது நாட்டுக்கே தெரியும்.

அதனுடைய தொடர்ச்சியாகத்தான், இப்போது "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற ஒரு திட்டத்தை நம்முடைய அரசின் சார்பில் தொடங்கியிருக்கிறோம். மருத்துவமனைகளைத் தேடி வரக்கூடிய மக்கள், அந்தச் சூழலை மாற்றக்கூடிய

வகையில், அதாவது மக்களைத் தேடி மருத்துவம் செல்லும் என்ற காலத்தை இப்போது நாம் உருவாக்கத் தொடங்கியிருக்கிறோம். நோயால் பாதிக்கப்பட்டவர்களுடைய வீட்டிற்கே சென்று, சில அவசியமான மருத்துவச் சேவைகளை இதன் மூலமாக நாம் வழங்கப் போகிறோம். 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் இயலாமையில் உள்ள நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உடல்நலப் பரிசோதனை செய்யப்பட இருக்கிறது. குறிப்பாக, இரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரகப் பிரச்சனை, இதர நோய்கள், குழந்தைகளினுடைய பிறவிக் குறைபாடுகள் இதையெல்லாம் கண்டறிந்து சிகிச்சை அளிப்பது இந்தத் திட்டத்தின் முக்கியப் பணியாக இருக்கப் போகிறது. இதில் பொது சுகாதாரப் பணியாளர்கள், தன்னார்வலர்கள் பங்கெடுத்து அவர்களுடைய சேவையை ஆற்றவிருக்கிறார்கள். முதல் கட்டமாக, 1264 பெண் சுகாதாரத் தன்னார்வலர்களும், 50 இயன்முறை (Physiotherapy) மருத்துவர்களும், 50 செவிலியர்களும் இல்லம் தேடி வரும் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கிறார்கள். இது படிப்படியாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படவிருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் மாநிலம் முழுவதும் இது நிச்சயமாக விரிவுபடுத்தப்படும், அவர்களுக்கான கூடுதல் சிகிச்சைகளை மருத்துவமனைகளில் வழங்குவோம். இதற்காக முதல் கட்டமாக, 242 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாக, 30 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கோடி மக்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

"ஸ்டாலினின் ஏழு உறுதிமொழிகள்" என்ற பத்தாண்டுத் தொலைநோக்குத் திட்டத்தில் "அனைவருக்கும் நல்வாழ்வு" என்பது ஒரு முக்கிய உறுதிமொழியாக

இருக்கிறது. அதனை நிறைவேற்றுவதற்காகத்தான் மக்களைத் தேடி மருத்துவம் என்ற இந்தத் திட்டத்தை இந்தப் பகுதியில் நான் தொடங்கி வைத்திருக்கிறேன். இந்த நேரத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் என அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் நோக்கத்தை மக்கள் அனைவரும் உணர்ந்து, இந்தச் சேவையை நீங்கள் நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**கேள்வி:** மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் டயாலிசிஸ்-க்கு நோயாளிகள் மலை கிராமத்திலிருந்து மருத்துவமனைக்கு வருவதற்கு மிகச் சிரமமாக இருக்கிறது, அந்தத் திட்டத்தில் டயாலிசிஸ் நோயாளிகளுக்கு அங்கு சிகிச்சை அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்:** அதுவும் செய்யப் போகிறோம், அதற்கான முயற்சியும் நடந்துகொண்டிருக்கிறது. Portable இயந்திரங்கள் மூலமாக அதையும் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

**கேள்வி:** மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் மலைக் கிராமங்கள் இருக்கக்கூடிய பகுதியான கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் இருக்கிறார்கள், குறிப்பாக, வனப்பகுதிகளில் ரத்தசோகை உள்ளவர்கள் அதிகளவில் இருக்கிறார்கள். இந்தத் திட்டம் அவர்களுக்கு எந்த அளவுக்கு பயனளிக்கும்? தமிழகம் முழுவதும் இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்தப் போகிறோம்?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்:** அதற்குத் தேவையான மருந்து, மாத்திரைகள் அனைத்தும் அதிக அளவில் கொடுத்து அதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் நிச்சயம் ஈடுபடுவோம்.

**கேள்வி:** 1264 பெண் சுகாதார ஊழியர்களை ஈடுபடுத்தப்போவதாகச் கூறினீர்கள், நிறைய கிராமங்களில் Village Health Nurses இடங்கள் காலியாக இருக்கிறது, அவர்கள் முதலில் Grass Root Medical Intervention செய்துகொண்டிருந்தார்கள். அந்த உட்கட்டமைப்பை இதன் மூலமாக வலுப்படுத்துவோமா?

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பதில்** : ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்களில் இருக்கும் செவிலியர்கள் மற்றும் துணைச் செவிலியர்கள் உட்பட அனைவருக்கும் ஏற்கனவே, வெளி முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுக் கடந்த 15 நாட்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இதில் தன்னார்வலர்களையும் பயன்படுத்தப் போகிறோம். இந்தச் செவிலியர்களுக்குப் பணி நியமனம் மற்றும் கூடுதலாகப் பணி நியமனங்கள் அனைத்தும் இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 25,000 மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்களை இந்த ஆண்டு இறுதிக்குள் பணியமர்த்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். புதிய பணியிடங்கள், ஏற்கனவே இருக்கும் பணியாளர்கள் இவர்களைக் கொண்டு மொத்தம் 25 ஆயிரம் பேர் இந்தக் களப்பணியில் ஈடுபடவிருக்கிறார்கள்.

**கேள்வி** : கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பரிசுப் பெட்டகம் என்று கொடுக்கிறோம், அது ஒசூரில் மட்டும் வருடத்திற்கு 3500 குழந்தைகள் பிறக்கின்றன, ஆனால், 300 முதல் 400 பெட்டகம்தான் வருகிறது என்று சொல்கிறார்கள், பலருக்குக் குழந்தையே பிறந்து விடுகிறது, ஆனால் அவர்களுக்குப் பெட்டகம் கிடைப்பதேயில்லை. ஏற்கனவே, பலருக்கு ஊட்டச்சத்துக் குறைபாடுகள் இருக்கிறது, தாய்க்குக் கொடுப்பதற்காக அந்தத் திட்டம் கொண்டுவந்தார்கள், ஆனால் அந்தத் திட்டம் சேரவில்லை.

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பதில்** : ஊட்டச்சத்துப் பரிசுப் பெட்டகத்தைப் பொறுத்தவரை கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாகக் கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில், கடந்த ஆட்சிக்காலத்தில் அதில் சுணக்கம் ஏற்பட்டது உண்மை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையை ஆய்வு செய்தபோது, ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திட்டமாக இருந்தாலும் அதைத் தொடர்ந்திட வேண்டுமென்று இந்தத் துறைக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்த வகையில்தான் கடந்த 10 நாட்களாக எல்லா மருத்துவமனைகளிலும் அந்தப் பெட்டகம் தருகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**கேள்வி:** ஒசூர் தாலுகாவில் இனாம் நிலங்கள் இருக்கிறது. கடந்த அதிமுக அரசு 7.11.2019ல் நில வரித்திட்ட அலுவலகம் என்று திறந்து வைத்து அதன் மூலமாக அந்த நிலத்தை வாங்கிய விவசாயிகளுக்கெல்லாம் பட்டா கொடுத்துவிடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றுவரை பட்டா கொடுக்கவில்லை. அந்த விவசாயிகளிடமிருந்து பெரிய தொகை வசூல் செய்திருக்கிறார்கள். ஆனால் அது

மறுபடி விவசாயிகளிடத்திலும் சேரவில்லை. அந்த அலுவலகம் செயல்படாமல் இன்னமும் இருக்கிறது, அந்த நிலமும் அப்படியே இருக்கிறது, அது சம்பந்தமாக நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்:** ஒரு வாரத்திற்கு முன்புதான் நீங்கள் சொல்கிற வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்தப்போகிறோம், உரிய வகையில் அதற்குப் பரிகாரம் காணப்படும்.

**கேள்வி** : நீங்கள் 2000ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியில் ஓசூர் பகுதியில் உள்ளவர்களுக்கெல்லாம் பட்டா கொடுத்தார்கள், ஆனால் வருவாய்த்துறை ஆவணங்களில் பட்டா கொடுத்ததற்கான விவரங்கள் ஏற்றப்படவில்லை, வருவாய்த் துறை ஆவணங்களே இப்போது மாயமாகி விட்டன. பட்டா வாங்கியவர்களுக்குப் பட்டா இருக்கிறதே தவிர, அந்தப் பட்டா Classification Change செய்து கொடுக்காததால், அதைப் பயன்படுத்த முடியாமலேயே இருக்கிறது. இதுபோன்று ஓசூர் தாலுகா, தேன்கனிக்கோட்டை தாலுகாவிலும் இருக்கிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்:** இது ஓசூரில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் நீங்கள் சொல்கின்ற இந்தக் குறைபாடுகள் இருக்கிறது. கடந்தகால ஆட்சியில் அதை முறைப்படுத்தவில்லை என்பது உண்மை. அதை முறைப்படுத்துவதற்கான முயற்சியில் இந்த அரசு முழுமையாக ஈடுபட்டிருக்கிறது.

**கேள்வி** : தலைவருடைய ஆட்சிக் காலத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட மக்களுக்காக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் இத்திட்டம் இன்னும் முழுமையாக இரு மாவட்டங்களுக்கும் சென்றடையவில்லை.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்** : அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட திட்டம். அது நூற்றுக்கு நூறு சதவீதம் முழுமையாக நிறைவேறி முடியாத நிலையில், ஆட்சி மாற்றப்பட்டது. ஆனால் ஆட்சிக்கு வந்த கடந்த 10 ஆண்டு ஆட்சிக்காலத்தில் இந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். இது திமுக கொண்டு வந்த திட்டம், கலைஞர் கொண்டு வந்த திட்டம், ஆகவே, இதைக் கேட்பாரற்ற நிலையில் போட்டுவிட்டார்கள். அதனால் பல இடங்களில் இன்னும் தண்ணீர் போகமுடியாத சூழ்நிலை இருந்தது. அதனால் கடந்த 10, 15 நாட்களுக்கு முன்பு அந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு நேரு அவர்கள், அவருடைய அதிகாரிகளுடன் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டு அதன் அறிக்கையை முதலமைச்சருக்கும், அரசுக்கும் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரைவிலேயே அது முழுமை பெறும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கேள்வி** : தலைவர் ஆட்சிக்காலத்தில்தான் ஒசூர் பகுதியில் சிப்காட் தொடங்கப்பட்டது. இந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ரயில் சேவை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உதான் திட்டத்தில் ஒசூரிலிருந்து விமானச் சேவையை மத்திய அரசு அறிவித்தார்கள். ஆனால் அது செயல்படுத்தப்படவில்லை? இந்த மாவட்டத்தினுடைய மக்களின் கோரிக்கையாகவே இருக்கிறது?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதில்**: உங்களுடைய கோரிக்கை நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

**கேள்வி** : தமிழ்நாட்டில் தடுப்பூசி தட்டுப்பாடு நிறைய இருக்கிறது. எப்போது இதற்கு தீர்வு காணப்படும்?

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பதில்** : தடுப்பூசியைப் பொறுத்தவரை ஒன்றிய அரசின் சார்பில் வழங்கப்படுகிற அந்த 75 சதவீத தடுப்பூசி எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துத் தருகிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொடர் வேண்டுகோள், பிரதமரிடத்தில் பேசியது, கடிதங்கள் எழுதியது போன்றவற்றின் விளைவாகக் கடந்த மாதம் 72 இலட்சம் எனத் தொகுப்பிலிருந்து தருவதாகச் சொன்னார்கள். ஒரு மகிழ்ச்சியான விஷயம் என்னவென்றால் 19 இலட்சம் தடுப்பூசிகளை இந்தியாவிலேயே கூடுதலாகத் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு தந்திருக்கிறது. காரணம், இதில் தமிழ்நாட்டினுடைய செயல்திறன் நன்றாக இருக்கிறது என்று சொல்லி, அந்த வகையில் இந்த மாதத்திற்கு 79 இலட்சம் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். இதுவரையில் வந்திருப்பது 2 கோடியே 39 இலட்சம். இன்னும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளது. இந்த வகையிலே தடுப்பூசிகள் எங்கும் தட்டுப்பாடு இல்லாமல் எல்லா இடத்திலும் போய்க் கொண்டிருக்கிறது.

- - - - -

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9